00083

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்
இறுதிப் பரீட்சை - 2019/2020
மட்டம் -03
LLU3261/LWU1161- சட்டத்தினை விளங்கிக் கொள்ளல்
காலம் - இரண்டு (02) மணித்தியாலம்

திகதி – 20 டிசெம்பர் 2019 நேரம்: பி.ப 2.00 – பி.ப 4. 00.

---

**எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01 i). எழுத்தாணைகளின் வகைகள் மற்றும் அவற்றின் பணிகள் யாவை?

**(10 புள்ளிகள்)**

ii). இலங்கையின் சட்டத் தோற்றுவாய்களான நியதிச் சட்டம், நீதிமன்றங்கள், வழக்காறுகள், சட்டவாளர்களின் எழுத்துக்கள், மற்றும் ஒப்புரவு என்பவற்றினுடைய முக்கியத்துவத்தினை சுருக்கமாக ஆராய்க.

**(15 புள்ளிகள்)**

02. i). இங்கிலாந்து மற்றும் இலங்கையில் உள்ளவாறான பாராளுமன்ற மீயுயர்தன்மை கோட்பாட்டினை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

உமது விடையினை பொருத்தமான உதாரணங்களினால் ஆதாரப்படுத்துக.

**(15 புள்ளிகள்)**

ii). வலுவேறாக்கற் கோட்பாட்டினையும் அதனுடைய முக்கியத்துவத்தினையும் சுருக்கமாக ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

03. i). இலங்கையில் காணப்படுகின்ற நீதிமன்ற பதவணியினையும் அவ் நீதிமன்றங்களின் செயற்பாடுகளையும் விளக்குக.

**(15 புள்ளிகள்)**

ii). மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

04. i). தமிழனான ராஜேஷ் என்பவன் 1960 ஆண்டு தென்னிந்தியாவில் சென்னையில் பிறந்தான். அவனுக்கு இரண்டு வயதான போது அவனது பெற்றோர் யாழ்ப்பாணத்திற்கு குடி பெயர்ந்ததுடன் தன்னுடைய கல்வியினை அவன் அங்கு தொடர்ந்தான். பதினெட்டு வயதினை அடைந்த போது அவன் பாடசாலையிலிருந்து விலகி கொழும்பில் ஆசிரியராக தொழிலொன்றைப் பெற்றுக் கொண்டான். ஒவ்வொரு வார இறுதி நாட்களிலும் அவனது பெற்றோரிடம் சென்று வந்தான். 1990 ஆம் ஆண்டு தமிழ் பெண்ணொருத்தியான சாயா என்பவளினை அவன் திருமணம் செய்து அவளுடைய பெற்றோரின் வீட்டில் வசித்து வந்தான். யாழ்ப்பாணத்தில் காணித்துண்டொன்றைக் கொள்வனவு செய்த ராஜேஷ் புதிய வீடொன்றைக் கட்டுவதற்கு ஆரம்பித்தான். விடுமுறையினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த போதெல்லாம் அவன யாழ்ப்பாணத்திற்குச் சென்று அவ்வீட்டில் தங்கினான். யாழ்ப்பாணத்திற்கு மாற்றல் பெற்று அங்கு சென்று வாழ்வதற்கு அவன் விரும்பினாலும் கொழும்பை விட்டுச் சென்று அங்கு நிரந்தரமாக வசிப்பதற்குச் சாயா மறுத்தாள். 2018 இல் விபத்தொன்றினை எதிர்கொண்டு ராஜேஷ் மரணமடைந்தான்.

ராஜேஷ் இனுடைய ஆதனத்திற்கு எச் சட்டம் பிரயோகிக்கப்படும் என்பதனை ஆராய்க.

**(15 புள்ளிகள்)**

ii). இடஞ்சார் சட்டம் என்பதற்கும் ஆள்சார் சட்டம் என்பதற்கும் இடையிலான வேறுபாட்டினை சுருக்கமாக ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

05. i). கொழும்பில் வாடகை வண்டிச் சேவையினை வழங்கும் 'மைக்ரோ கப் அன்ட் கோ' (Micro Cab & Co.) இற்கு நவீன் தன் காரினை வாடகைக்கு வழங்கினான். காரினை அவன் பராமரித்ததுடன் மாதமொன்றில் மேற்கொள்ளப்பட்ட வாடகைச் சேவையின் அடிப்படையில் நவீனினது கொடுப்பனவு கணக்கிடப்பட்டது. லோகோவுடன் கம்பனியின் நிறத்தில் காருக்கு அவன் வண்ணம் தீட்டவும் வேண்டியிருந்தது. கம்பனியின் சீருடையினை அவன் அணியுமாறு கோரப்பட்டான். கம்பனியின் சேவைகளுக்கு மாத்திரமே அவன் காரினைப் பயன்படுத்த வேண்டியிருந்தது.

காரணமெதுவும் கூறாமல் மைக்ரோ கப் அன்ட் கோ (Micro Cab & Co.) நவீனுடனான ஒப்பந்தத்தினை முடிவுறுத்தியது.

நவீனுக்கு ஆலோசனை வழங்குக.

**(15 புள்ளிகள்)**

ii). பிரச்சினைகளுக்கான தீர்வுப் பொறிமுறையொன்றாக தொழிலாளர் தீர்ப்பாயத்தின் வினைத்திறனை விளக்குக.

**(10 புள்ளிகள் )**

06. பின்வருவனவற்றில் எவையேனும் **இரண்டு** தொடர்பில் சிறுகுறிப்பு வரைக.

i) பெறுமதிமிக்க பிரதிபயன் மற்றும் நல்லேது

ii) அடிப்படை உரிமைகள் மீதான மட்டுப்பாடு

iii) கொடைமுனைவின் வேறுபட்ட வகைகள்

iv) அரசியலமைப்பின் வகைகள்

**(25 புள்ளிகள்)**

07. "தொழில் தருனர்களின் உரிமைகளினையும் நலன்களையும் பாதுகாப்பதற்கு இலங்கை அரசானது பல்வேறு சட்டங்களினை வெற்றிகரமாக அமுலாக்கியுள்ளது."

மேற்போந்த கூற்றினை பொருத்தமான சட்டங்களின் உதவியுடன் ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

08. i) டயாள் என்பவனும் கயானி என்பவளும் தங்களுடைய ஏப்ரல் விடுமுறையினை கழிப்பதற்காக கதிர்காமத்திற்குச் சென்றனர். 'கிரான்ட் றோயல்' ஹோட்டலில் தங்குவதற்கு அவர்கள் தீர்மானித்தனர். அவர்கள் நான்கு நாட்களுக்கான அறை வாடகையினைச் செலுத்திய பின்னர் தம் அறைக்குச் சென்றனர். அறையினுள் நுழைந்தவுடன் 'ஹோட்டல் நிர்வாகமானது தொலைந்த அல்லது களவாடப்பட்ட பொருட்களுக்குப் பொறுப்பாகாது' எனும் அறிவிப்பினை அவர்கள் கண்ணுற்றனர். நான்காம் நாளில் புறப்படுவதற்கு முன்னர் தன்னுடைய தங்க மோதிரம் காணாமற் போயுள்ளமையினை டயாள் அவதானித்தான். ஹோட்டலுக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கு டயாள் விரும்புகின்றான்.

டயாளுக்கு ஆலோசனை வழங்குக.

**(15 புள்ளிகள்)**

ii). சட்டத்தினால் அமுல்படுத்தப்படக் கூடிய ஒப்பந்தங்களினை உருவாக்குவதற்கு திருப்திப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

*** பதிப்புரிமை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது***